# 48

# சீஷத்துவத்தின் அடையாளங்கள்

## படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #19

VI. மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை (தொடர்ச்சி).

H. ஏரோதுவின் எல்லைப் பகுதியில் இருந்து இன்னொரு விலகிச் செல்லுதல் (தொடர்ச்சி).

6. அசுத்த ஆவிபிடித்த ஒரு பையனைக் குணமாக்குதல் (மத். 17:14-21; மாற். 9:14-29; லூக். 9:37-43).
7. கலிலேயாவுக்குத் திரும்புதல் (இயேசுவின் மரணம் மீண்டும் முன்னுரைக்கப்பட்டது) (மத். 17:22, 23; மாற். 9:30-32; லூக். 9:43-45).

I. தேவாலய வரியைப் பற்றிய கேள்வி (மத். 17:24-27).

J. சிறுபிள்ளையைப் போலிருத்தலின் அவசியத்தைப் பற்றிப் போதித்தல் (மத். 18:1-14; மாற். 9:33-50; லூக். 9:46-50).

### அறிமுகம்

இயேசு தமது பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி நாட்களின்போது, தமது பிரிவுக்கு [மரணத்திற்கு] தமது அப்போஸ்தலர்களைத் தயார் செய்வதில் கவனம் செலுத்தினார். அவர் பயணம் செய்கையில், "... அதை ஒருவரும் அறியாதிருக்க வேண்டுமென்று விரும்பினார். ஏனெனில், ... அவர் தம்முடைய சீஷர்களுக்குப் போதகம் பண்ணிச் சொல்லியிருந்தார்" (மாற். 9:30ஆ, 31). "அவர் தமது சீஷர்களுக்குப் போதித்து, அவர்களுடன் நேரம் செலவிடக் கூடும்படிக்கு, எல்லா விளம்பரத்தையும் தவிர்க்க முயற்சி செய்தார்" என்று ஒரு பொழிப்புரை[1] கூறுகிறது. "என் சீஷனாக இருப்பது என்பதன் அர்த்தம் என்ன?" என்பது இந்த போதனையில் மீண்டும் மீண்டும் வருகிற ஒரு ஆய்வுப் பொருளாக உள்ளது எனலாம். இந்தப் பாடங்கள் அப்போஸ்தலர்களுக்குத் தேவைப்பட்டன; நமக்கும் இவை தேவைப் படுகின்றன.

# உங்கள் சொந்த திறமையில் அல்ல, கர்த்தருடைய பலத்தின்மீதே நம்பிக்கை கொண்டிருங்கள்

## (மத். 17:14-21; மாற். 9:14-29; லூக். 9:37-43)

நமது பாடம், இயேசுவும், பேதுருவும், யாக்கோபுவும் மற்றும் யோவானும், கர்த்தர் மறுரூபமான "பரிசுத்த பருவதத்தில்" (2 பேது. 1:18) இருந்து இறங்கிவரும் நிகழ்ச்சியுடன் தொடங்குகிறது. பத்துக் கட்டளை களைப் பெற்றுக்கொண்டு மோசே மலையிலிருந்து இறங்கி வந்தபோது, அவர் கீழ்ப்படியாமையின் கலகத்தினால் வரவேற்கப்பட்டார் (யாத். 32); மறுரூபமாகிய பின்பு கிறிஸ்து மலையிலிருந்து இறங்கி வந்தபோது, அவர் அவிசுவாசத்தின் பெருங்குழப்பத்தினால் வரவேற்கப்பட்டார்.

ஒரு மனிதர், அசுத்த ஆவிபிடித்திருந்த தமது மகனை இயேசுவால் குணமாக்கப்படுவதற்காகக் கொண்டு வந்திருந்தார், ஆனால் கர்த்தருடைய சீஷர்களால் அந்த அசுத்த ஆவியைத் துரத்த முடியாது இருந்தது. எப்போதும் இருந்துகொண்டு, எப்போதும் விமர்சனம் பண்ணிக்கொண்டிருந்த வேதபாரகர்கள் கிறிஸ்துவின் ஊழியத்தைப் பழித்துரைப்பதற்கு இந்தச் சூழ்நிலையை அநுகூலப்படுத்திக் கொண்டார்கள்.[2] அங்கிருந்த மக்களின் (வேதபாரகர்கள், திரளான கூட்டத்தார், ஒரு பையனின் தந்தை, இயேசுவின் சீஷர்களிடத்திலும் கூட) விசுவாசத்தின் பலவீனம் கிறிஸ்துவின் இருதயத்தை உடையச் செய்தது (மத். 17:17; மாற். 9:19; லூக். 9:41). இருந்தபோதிலும், அவர்களின் அவிசுவாசமான நிலையிலும் அவர் தம்மை உண்மையுள்ளவராகக்[3] காண்பித்தார், மற்றும் அவர் அந்தப் பையனைக் குணமாக்கினார்[4] (மத். 17:18; மாற். 9:25, 26; லூக். 9:41).

பிற்பாடு, கர்த்தரும் அவரது அப்போஸ்தலர்களும் தனியாக இருந்த போது, அவரிடத்தில் அவர்கள், "அதை[அசுத்த ஆவியை]த் துரத்திவிட எங்களால் ஏன் கூடாதுபோயிற்று?" என்று கேட்டார்கள் (மத். 17:19; மாற். 9:28). அதற்கு அவர், "உங்கள் அவிசுவாசத்தினாலேதான்; கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, 'இவ்விடம் விட்டு அப்புறம்போ' என்று சொல்ல அது அப்புறம்போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று பதில் அளித்தார் (மத். 17:20).[5] இவ்வரலாற்றில் வருகின்ற பையனுடைய தந்தையைப் போல் (மாற். 9:24), சீஷர்களும் விசுவாசித்தார்கள் - ஆயினும் அவர்கள் உண்மையிலேயே விசுவாசங் கொண்டிருக்கவில்லை (மத். 17:20). நம்மைப் போல் அவர்களும் தங்கள் விசுவாசத்துடன் போராடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போஸ்தலர்கள் அசுத்த ஆவிகளைத் துரத்துவதில் தங்களுடைய சுய திறமையை நம்பியிருந்ததால்தான் அவர்களால் அந்த அசுத்த ஆவியைத் துரத்த முடியாமல் போய்விட்டது என்று பல எழுத்தாளர்கள் நம்புகின் றார்கள்.[6] "நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், ... தேவன்மேல் நம்பிக்கையாயிரு[க்கின்றோம்]" என்று பவுல் எழுதினார் (2 கொரி. 1:9). நீண்ட காலத்திற்கு முன்பு தாவீது, "நீதியின் பலிகளைச் செலுத்தி,

*கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள்'' என்று கூறினார் (சங். 4:5). அந்த உணர்வை ஞானியான மனிதர் எதிரொலித்தார்: "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து" (நீதி. 3:5) என்று எழுதினார்.*

*உண்மையான சீஷர் ஒருவர், தமது சொந்த குறைபாடுகளை ஒப்புக் கொள்ளுகின்றார் (ரோமர் 3:10). அவர் தமது பெலத்திற்குக் கர்த்தரைச் சார்ந்து இருக்கின்றார் (2 சாமு. 22:31; சங். 9:10; 37:3, 5; 40:3, 4; 115:10, 11; ஏசா. 26:4; பிலி. 2:24 ஆகியவற்றைக் காணவும்).*

## உங்கள் சொந்த புரிந்துகொள்ளுதலையல்ல, கர்த்தருடைய வசனத்தையே சார்ந்திருங்கள் (மத். 17:22, 23; மாற். 9:30-32; லூக். 9:43-45)

*இயேசுவும் பன்னிருவரும் "பிலிப்புச் செசரியாவின் திசைகளிலிருந்து" (மத். 16:13; மாற். 8:27ஐக் காணவும்) கலிலேயாவுக்குத் திரும்பி வந்தார்கள் (மத். 17:22; மாற். 9:30).[7] முந்திய பயணங்களின்போது நடந்திருந்தது போலின்றி, அவர்கள் அந்த மாகாணத்தின் வழியை பயணம் செய்கையில், கிறிஸ்து கூட்டங்களைத் தவிர்த்தார். முன்பே குறிப்பிட்டபடி, "... அதை ஒருவரும் அறியாதிருக்க வேண்டுமென்று விரும்பினார். ஏனெனில், ... அவர் தம்முடைய சீஷர்களுக்குப் போதகம் பண்ணிச் சொல்லியிருந்தார்'' (மாற். 9:30, 31).*

*வரவிருந்த அவரது மரணம் என்பது அவர் நிலையாகத் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்த கருத்தாக இருந்தது: "... மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றும், அவர்கள் அவரைக் கொன்று போடுவார்கள் என்றும்; கொல்லப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றும் அவர் தம்முடைய சீஷர்களுக்குப் போதகம்பண்ணிச் சொல்லியிருந்தார்''[8] (மாற். 9:31; மத். 17:22, 23ஐக் காணவும்).*

*லூக்கா சுவிசேஷ விவரத்தின்படி, அவர் [இயேசு] "நீங்கள் இந்த வார்த்தைகளைக் கவனமாய்க் கேளுங்கள்'' என்று கூறுவதன் மூலம் இந்த அறிவுக்கு முகவுரையளித்தார் (லூக். 9:44அ). இது, "கவனியுங்கள், உண்மையாகவே கவனியுங்கள் மற்றும் இதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்! நான் கூறுவதைக் கவனித்து நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! கவனித்து புரிந்துகொள்ளுங்கள்!" என்ற கூறுவதற்கான அளவையியல் வழிமுறையாக உள்ளது. வார்த்தைகளைக் கேட்குதல் என்பது அவற்றைக் கவனித்தல் போன்றதாக இருப்பதில்லை. கர்த்தர் பேசுகின்ற போதெல்லாம், அவரது வார்த்தைகளை நமது வாழ்வில் ஒரு செயல்விளக்கத்தைக் காணும்படி அவைகள் நமது காதுகளுக்குள்ளும் சிந்தைகளுக்குள்ளும் அமிழ்ந்துபோக நாம் அனுமதிக்க வேண்டியது அவசியமாக உள்ளது!*

*இயேசுவின் வார்த்தைகளினால், சீஷர்கள் "மிகுந்த துக்கமடைந்தார்கள்'' (மத். 17:23), ஆனால் மீண்டும் ஒருமுறை அவர்கள் "அந்த*

வார்த்தையை அறிந்துகொள்ளவில்லை" (மாற். 9:32அ). மரிக்கின்ற மேசியா என்ற கருத்தானது அவர்களின் மேசியாத்துவ நம்பிக்கைகளுக்கு நேர்மாறாகச் சென்றதினால் அவர்கள், அவரது மரணம் பற்றிய கூற்றைப் புரிந்துகொள்ளவில்லை.[9] அவரது உயிர்த்தெழுதல் பற்றிய கூற்றானது அவர்களின் அனுபவத்திற்கு நேர்மாறாக இருந்ததினால் அதை[யும்] அவர்கள் புரிந்துகொள்ளவில்லை (மாற். 9:10ஐக் காணவும்).

அவர்கள் புரிந்துகொள்ளாதிருந்தாலும், இன்னும் விளக்கமாய்த் தெரிந்துகொள்ள "அதைக் குறித்து அவரிடத்தில் கேட்கவும் பயந்தார்கள்" (மாற். 9:32ஆ). தங்களின் கேள்விகள் அவிசுவாசம் என்று உய்த்துணரப் படுமோ என்று அவர்கள் பயந்ததினால் கேட்காமல் இருந்திருக்கலாம். பேதுருவைப் போல் தாங்களும் கடிந்துகொள்ளப்படுவோமோ என்று அவர்கள் பயந்ததினால் கேட்காமல் இருந்திருக்கலாம் (மத். 16:23). அவர்கள் தங்கள் அறியாமையை வெளிப்படுத்தத் தயங்கியிருந்திருக்கலாம். எனது அறியாமையை ஒப்புக்கொள்ளுவதுதான் புதிய அறிவை நான் ஆதாயப் படுத்திக் கொள்ளக் கூடிய ஒரே வழிமுறையாக உள்ளது என்பதை நீண்ட நாட்களுக்கு முன்னதாகவே நான் கற்றுக் கொண்டிருக்கின்றேன். அப்படிப் பட்ட ஒரு ஒப்புதலானது வேதனைமிக்கதாக இருக்கிறது, ஆனால் அவசியமானதாக உள்ளது.

இந்த நிகழ்ச்சி பற்றிய லூக்காவின் விவரமானது திகைப்பூட்டும் கூற்றொன்றைக் கூட்டுகிறது: "அவர்கள் அந்த வார்த்தையின் கருத்தை அறிந்துகொள்ளவில்லை; அது அவர்களுக்குத் தோன்றாமல் மறைபொருளா யிருந்தது ..." (லூக். 9:45). அதன் அர்த்தத்தை சீஷர்களிடமிருந்து மறைத்தது யார் அல்லது எது? இயேசுவின் கூற்றுக்களை முழுமையாக அவர்கள் அறிந்துகொண்டால் அது அவர்களை மூழ்கடித்துவிடும் என்ற காரணத்தி னால் கர்த்தர் அந்த அர்த்தத்தை மறைத்திருக்கலாம். அதை சாத்தான் மறைத்திருக்கலாம்; அவன் மனிதர்களின் சிந்தைகளில் இருந்து வசனத்தை நீக்குவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்கின்றானே (லூக். 8:12). ஆயினும், பர்ட்டன் காஃப்மேன் என்பவர், "மறைக்கப்படுதல் என்பது தேவனுடைய [இவ்விடத்தில் நான் "அல்லது பிசாசினுடைய" என்பதைக் கூடுதலாகக் கூறுவேன்] வடிவமைப்பாக இருந்ததில்லை ஆனால் அது மனிதருடைய வரையறைக்குட்பட்ட தன்மையினாலேயே இருந்தது"[10] என்று கூறும்போது சரியாகத் தான் கூறினாரோ என்று நான் ஐயப்படுகின்றேன். இராஜ்யத்தைப் பற்றிய அப்போஸ்தலர்களின் முன் கூட்டிய அபிப்பிராயமும் மறைத்தலின் முகவராக இருந்திருக்க வாய்ப்புள்ளது.

அதுவே விஷயமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், நெருங்கிக் கொண்டிருந்த தமது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றைப் பற்றி கர்த்தர் கூறவேண்டியிருந்தவற்றை ஏற்றுக்கொள்ளுவதற்குச் சீஷர்கள் கடினமான வேளையைக் கொண்டிருந்தார்கள். கர்த்தர் கூறுகின்றவைகள் ஒருவரின் சொந்தக் கருத்துக்களுக்கும் காரண அறிவுக்கும் ஒப்புமையற்ற வைகளாயிருப்பினும், அவர் கூறுபவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் என்பது சீஷத்துவத்திற்கு அத்தியாவசியமான பண்பாக உள்ளது. மனித ஞானத்தைச் சார்ந்திருத்தலில் உள்ள வீணான தன்மையைப் பவுல்

பின்வரும் தமது எழுத்துக்களில் வலியுறுத்தினார்:

> சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. "அந்தப்படி: ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன்" என்று எழுதியிருக்கிறது. ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா? எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று (1 கொரி. 1:18-21).

ஒரு உண்மையான சீஷன் மனிதரின் காரண அறிவைச் சார்ந்திருப்பதில்லை (நீதி. 3:5), ஆனால் அவர் தெய்வீக வெளிப்படுத்துதலையே சார்ந்திருக்கின்றார் (2 தீமோ. 3:16, 17).

## உங்கள் சொந்த உரிமைகளைப் பற்றியல்ல, கர்த்தருடைய விஷயங்களைப் பற்றியே அக்கறையாயிருங்கள் (மத். 17:24-27[11])

இயேசுவும் அவரது குழுவினரும் கலிலேயாவில் பயணம் செய்து கொண்டிருக்கையில், அந்த மாகாணத்தில் கர்த்தரின் ஊழியத்தின்போது, அவரது தலைமையகமாகச் செயல்பட்ட நகருக்கு வந்தார்கள். "அவர்கள் கப்பர்நகூமில் வந்தபோது, வரிப்பணம் வாங்குகிறவர்கள் பேதுருவினிடத்தில் வந்து: 'உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா' என்று கேட்டார்கள்" (வ. 24).

கிரேக்க மொழி வசனத்தில் இவ்விடத்தில் [வரிப்பணம் என்பதற்கு] "இரண்டு திராக்மா"[12] என்று மட்டுமே உள்ளது. திராக்மா[13] என்பது நமது பாடங்களில் நாம் எதிர்கொண்டுள்ள ரோமாபுரி தினேரியத்திற்கு ஏறக்குறையச் சமமானதாக உள்ளது (லூக். 7:41; யோவா. 6:7ஐக் காணவும்) - இது சாதாரண உழைப்பாளியின் ஒரு நாள் கூலிக்குச் சமமானதாக உள்ளது[14] (மத். 20:2ஐக் காணவும்).

மூலவேதவசனத்தில், வசனம் 24ல் "வரி" என்ற வார்த்தை காணப்படுவதில்லை, ஆனால் வசனம் 25ல் இயேசு இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார். இங்கு கூறப்பட்ட வரி என்பது தேவாலய வரி[15]யாக இருந்தது. இருபது வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு யூத ஆணும் தேவாலயப் பராமரிப்பு மற்றும் ஆராதனைச் செலவுகளுக்கென்று அரைச் சேக்கல் வரியைச் செலுத்த வேண்டும் என்று மோசேயின் பிரமாணம் கேட்டுக் கொண்டிருந்தது (யாத். 30:11-16; 2 இரா. 12:12; 2 நாளா. 24:5-9; நெகே. 10:32 ஆகியவற்றைக் காணவும்). சேக்கல் என்பது ஏறக்குறைய நான்கு தினேரியம் அல்லது நான்கு திராக்மாக்களுக்குச் சமமானதாக இருந்தது, எனவே அரை சேக்கல் என்பது இரண்டு தினேரியம் அல்லது இரண்டு

திராக்மாக்களாக இருந்தது.

வரி வசூலிப்பவர்கள் ரோம வரிவசூலிப்பவர்களாய் இருப்பதற்கு மாறாக, யூத தேவாலய அலுவலர்களாக இருந்தார்கள். வரியானது சாதாரணமாக வசந்த காலத்தில் செலுத்தப்பட்டது, இப்போது முன் பனிக் காலமாக இருந்தது; ஆனால் கிறிஸ்து (அவரது "தங்குமிடமான") கப்பர் நகூமில் பல மாதங்களாக இல்லாதிருந்தார். இப்போது அவர் நகருக்குத் திரும்பி வந்திருந்தார் என்று வரிவசூலிப்பவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள் எனவே அவரைக் காண்பதற்கு வந்தார்கள். ஒருவேளை அவர்கள் வசூலித்து முடிக்க வேண்டிய அளவு ஒன்று இருந்திருக்கலாம், ஆனால் அவர்கள் அநேகமாக அவருக்கு எதிராகக் குற்றம் சாட்டும் ஆதாரங்களைச் சேகரிப்பதில் அதிக ஆர்வத்துடன் இருந்திருக்கலாம்.

கிறிஸ்து கப்பர்நகூமில் இருந்தபோது பெரும்பாலும், பேதுருவின் வீட்டில் தங்கினார் (மாற். 1:29, 30; 2:1 ஆகிய வசனங்களைக் காணவும்), எனவே அலுவலர்கள் அவரைக் காண்பதற்காக அங்கு சென்றார்கள். வீட்டிற்கு வெளியே[16] பேதுருவை எதிர்ப்பட்ட அவர்கள், "உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா" என்று கேட்டார்கள் (மத். 17:24ஆ). வார்த்தைகளுக்கு ஒருபோதும் பஞ்சம் கொண்டிராத அந்த அப்போஸ்தலர், "செலுத்துகிறார்" என்றார் (வ. 24ஆ). ஒருவேளை அவர், கர்த்தர் இதற்கு முன்னர் வரிசெலுத்தியிருந்ததால் இவ்வாறு பதில் கூறியிருக்கலாம். ஒருவேளை அவர், சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று கர்த்தர் போதித்திருந்தபடியால் இவ்வாறு பதில் கூறியிருக்கலாம். ஒருவேளை அவர், அடிக்கடி பேசுவதுபோல், தமது சிந்தையில் முதலில் வந்ததை அப்படியே கூறியிருக்கலாம்.

பேதுருவின் காரணம் எதுவாக இருந்தாலும், என்ன நடந்திருந்தது என்பதை அறிந்த கர்த்தர், இதை ஒரு முக்கியமான பாடத்தைப் போதிக்கும் ஒரு வாய்ப்பாகக் கண்டார். "அவன் வீட்டிற்குள் வந்தபோது, அவன் பேசுகிறதற்கு முன்னமே இயேசு அவனை நோக்கி: 'சீமோனே, உனக்கு எப்படித் தோன்றுகிறது? பூமியின் ராஜாக்கள் தீர்வையையும் வரியையும் தங்கள் பிள்ளைகளிடத்திலோ, அந்நியரிடத்திலோ, யாரிடத்தில் வாங்கு கிறார்கள்?' என்று கேட்டார்" (வ. 25). அந்தக் கேள்வியைக் குறித்துப் பேதுரு பிரச்சனையெதையும் கொண்டிராதிருந்தார். அவர், "அந்நியரிடத்தில் வாங்குகிறார்கள்" என்று பதில் அளித்தார் (வ. 26அ). இயேசு, "அப்படி யானால், பிள்ளைகள் அதைச் செலுத்த வேண்டுவதில்லையே" என்று விடையளித்தார் (வ. 26ஆ). ராஜாவின் (தேவனின்) மகன் என்ற வகையில், கிறிஸ்து தமது தந்தையின் வீட்டில் (தேவாலயத்தில்) வரிசெலுத்த வேண்டுவதிலிருந்து விதிவிலக்குப் பெற்றிருந்தார் என்பது தெளிவான மறைகருத்தாக உள்ளது.[17] இதை வேறு வகையில் கூறுவதென்றால், அவர் வரிசெலுத்தாமல் இருப்பதற்கான *உரிமை* கொண்டிருந்தார் - ஆனால் ஒரு சீஷன் தனது உரிமையை வலியுறுத்துவதினால், தமது எஜமானரின் விஷயங் களுக்குத் தீங்கு விளைவிக்கப்படும் என்றால் அவ்வாறு வலியுறுத்துவதில்லை என்பதைப் பேதுரு கற்றுக்கொள்வது அவசியமாக இருந்தது.

இயேசு தொடர்ந்து பின்வருமாறு கூறினார்: "ஆகிலும் நாம்

அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு, நீ கடலுக்குப் போய், தூண்டில் போட்டு,[18] முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதின் வாயைத் திறந்துபார்; ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய்; அதை எடுத்து எனக்காக வும், உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு" (வ. 27). ரிச்சர்டு ரோஜர்ஸ் அவர்கள், "என்ன ஒரு முரண்பாட்டு மெய்யுரை! அரை சேக்கல் மதிப்பே உடைய வரியை ஆலயத்திற்குச் செலுத்த முடியாத அளவுக்கு வருமை யினால் தாக்கப்பட்டிருந்த ஒரு அரசர்!"[19] என்று எழுதினார். "சேக்கல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை sater என்பதாக உள்ளது, இது நான்கு திராக்மாக்கள்[20] மதிப்புடைய கிரேக்க நாணயமாகும் - இது இரு மனிதர்களுக்குத் தேவாலய வரியைச் செலுத்த, மிகச் சரியாகப் போதுமான தாக இருந்தது.

கிறிஸ்துவால் முன்மொழியப்பட்ட இந்த அற்புதம் தனிச்சிறப்பான தாக இருந்தது. பணத்தை உள்ளடக்கியிருந்த அற்புதம் இது ஒன்று மட்டுமேயாகும், அவருக்கு தனிப்பட்ட முறையில் பயனளிக்கக் கூடியதாக இருந்தது இது ஒன்று மட்டுமே. விளைவைக் குறித்து நமக்கு ஒன்றும் கூறப்படாத அற்புதம் இது ஒன்று மட்டுமேயாகும், சந்தேகத்திற்கிடமின்றி இது கர்த்தருடைய அற்புதங்களில் மிகவும் வினோதமானதாக உள்ளது. நிச்சயமாகவே, இயேசு ஒரு மீனவரிடத்தில் - சிந்தனையின்றி அடிக்கடி தமது வாயைத்திறந்த ஒருவரிடத்தில் - ஒரு மீனின் வாயில் தமது பிரச்சனைத் தீர்வைக் கண்டறியும்படி கூறிய வகையில் அவரது வார்த்தைகளில் நாம் நகைச்சுவையின் தொடுதல் ஒன்றைக் காண்கின்றோம்.

ஆயினும், இந்த அற்புதத்தின் புதுமைத் தன்மையானது இயேசுவின் அறிவுறுத்துதல்களில் இருந்த திறவுகோல் வார்த்தைகளை மறைக்க அனு மதித்து விடாமல் கவனமாயிருங்கள்: "நாம் அவர்களுக்கு இடறலாயிராத படிக்கு.'' ''இடறல்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையில் இருந்தே நாம் "scandalize" (களங்கம் விளைவித்தல்) என்ற வார்த்தையைப் பெறுகின்றோம். கிறிஸ்து, அலுவலர்களின் உணர்வுக்கு ஆட்படும் நிலைகளுக்கு இடறலாயிருத்தல் பற்றி கவலைப்படவில்லை; அவர் தமது ஊழியத்தின்மேல் சாதகமற்ற வெளிச்சத்தை வீசும் எந்த ஒரு விஷயத்தையும் செய்[யாதிருத்]தல் பற்றி அக்கறையாயிருந்தார். ஒருவர் தமது உரிமைகளை வலியுறுத்துவதற்கு முன்பாக சரியானதைச் செய்ய வேண்டியது அவசியம் என்பதைப் பேதுரு புரிந்துகொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார்.

இந்தச் சிந்தனை "கடினமான உபதேசமாக" இருக்கிறது (யோவா. 6:60). நமது உரிமைகளை வலியுறுத்துதல் என்பது இயல்பானதாக உள்ளது. நமக்குத் தகுதியானவற்றை நாம் பெற்றுக்கொள்ளும்படி வற்புறுத்து கின்றோம். நமக்கு உரிமை நிறைந்த வகையில் உள்ளவற்றைக் கவர்ந்து கொள்பவர்களை நாம் எதிர்க்கின்றோம். அந்த இயல்பான மனத்தூண்டு தல்களுக்கு மேலாக நாம் எழுந்து நிற்கும்படி, நமது நடவடிக்கைகள் அவரது விஷயத்தை எப்படிப் பாதிக்கும் என்பதை எப்போதும் ஆழ்ந்து சிந்திக்கும் படி இயேசு நம்மை அழைக்கின்றார். நமது வேதபாடப் பகுதியின் சொல்லாக்கத்தைப் பயன்படுத்துவது என்றால், நமது உரிமைகளை

வலியுறுத்துதல் என்பது கிறிஸ்துவின் விஷயத்திற்குக் ‘‘களங்கம்’’ விளைவிக்கும் என்றால், நாம் நமது உரிமைகளைத் துறக்க வேண்டும்.

இவ்வகையான சுயத்தை மறக்கும் தன்மை பற்றி மட்டும் இயேசு போதித்துக் கொண்டு இருக்கவில்லை; அதை அவர் வாழ்ந்து காண்பித்தார். இதன் செயல்விளக்கம் ஒன்றை நாம் அவரது பூமிக்குரிய ஊழியத்தின் தொடக்கத்தில் கண்டோம்: அவர் “பாவமற்றவராக” இருந்த காரணத்தினால் (எபி. 4:15; மத். 3:14ஐக் காணவும்) யோவான் ஸ்நானனால் ஞானஸ்நானம் பெற வேண்டியிராத உரிமையைக் கொண்டிருந்தார், ஆனால் அவர், “எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்காக” (மத். 3:15) அந்த உரிமையை விட்டுக் கொடுத்தார். கிறிஸ்துவின் ஊழியத்தின் முடிவில் நாம் ஒரு செயல்விளக்கத்தைக் காண்போம்: மரணத்திற்குப் பாத்திரமான ஏதொன்றையும் அவர் செய்யாதிருந்த காரணத்தினால் மரிக்காமல் இருப்பதற்கு அவர் உரிமை கொண்டிருந்தார் (லூக். 23:4), ஆனால் நாம் இரட்சிக்கப்படும்படிக்கு அவர் அந்த உரிமையை விட்டுக் கொடுத்தார் (1 கொரி. 15:3).

ஒரு உண்மையான சீஷன், கர்த்தர் மகிமைப்படுதலையும் அவரது பணி வளமாவதையும் காணுதலைப் பற்றிக் கவலைப்படுமளவுக்குத் தனது உரிமைகளைப் பற்றி அதிகமாய்க் கவலைப்படுவதில்லை![21]

## உங்கள் சொந்த விஷயங்களையல்ல, கர்த்தருடைய ஊழியத்தை மேம்படுத்துங்கள் (மத். 18:1-14; மாற். 9:33-50; லூக். 9:46-50)

சற்று முன்னதாக இயேசு, தாம் கட்டவிருந்த சபையை மேசியாத்துவ இராஜ்யமாக அடையாளப்படுத்தியிருந்தார் (மத். 16:18, 19). தமது இராஜ்யம் ஆவிக்குரியதாக இருக்கும் - பூமிக்குரியதாகவோ, மாம்சத்திற்குரியதாகவோ அல்லது அரசியல் ரீதியானதாகவோ இராது - என்பதைத் தமது பின்பற்றாளர்களின் மனங்களில் பதிய வைக்க அவர் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருந்தார். அது ஒரு வரைபடத்தில் அல்ல ஆனால் மனிதர்களின் இருதயங்களில் அமைந்திருக்கும். அவரது சீஷர்கள் இந்த சத்தியத்தைப் புரிந்துகொள்ள முற்றிலும் தவறினார்கள். பதிவு செய்யப்பட்ட அடுத்த நிகழ்ச்சியில் அவர்களின் புரிந்துகொள்ளுதலில் இருந்த குறைபாடு தெளிவாக உள்ளது.

ஒரு நாள், அவர்கள் பயணம் செய்து கொண்டிருக்கையில், இராஜ்யத்தில் “தங்களில் எவன் பெரியவனாயிருப்பான்” என்பது பற்றி தர்க்கம் செய்யத் தொடங்கினார்கள் (லூக். 9:46; மத். 18:1; மாற். 9:34; ஐக் காணவும்). அவர்களுடைய வாக்குவாதம் பேதுருவுக்கு இயேசுவால் அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தினாலோ (மத். 16:19) அல்லது கர்த்தர் மலைக்குச் செல்லுகையில் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரைக் கூட்டிக் கொண்டு சென்றதினாலேயோ (மத். 17:1) தூண்டப்பட்டு இருக்கலாம். நமக்கு விவரம் ஒன்றும் தரப்படவில்லை, ஆனால் அந்த தர்க்கத்திலிருந்து எந்த ஒரு அப்போஸ்தலரையும் நீக்கிப்போட நமக்குக்

காரணம் எதுவும் இல்லை - பேதுரு, யாக்கோபு, யோவானும் கூட அநேகமாக, பூமிக்குரிய ஒரு இராஜ்யத்தில் கர்த்தர் தங்களை உயர்வான பதவியில் அமர்த்த ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார் என்று யூகித்திருக்கலாம்.[22]

அவர்கள் தங்களின் அடைவிடத்திற்குச் சென்று சேர்ந்தபோது,[23] அவர்களிடத்தில் கிறிஸ்து, "நீங்கள் வழியிலே எதைக் குறித்து உங்களுக் குள்ளே தர்க்கம் பண்ணினீர்கள்?" என்று கேட்டார் (மாற். 9:33). அவர்கள் முதலில் அநேகமாக, சங்கடத்தினால் அதற்குப் பதில் அளிக்கவில்லை (மாற். 9:34). இருப்பினும், அவர்கள் கலந்துரையாடியது என்ன என்பதை இயேசு மிகச் சரியாக அறிந்திருந்தார் என்பது தெளிவானபோது (லூக். 9:47), "பரலோகராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான்?" என்று அவர்கள் கேட்டார்கள் (மத். 18:1).

### சிறு பிள்ளைகளுடன் தொடர்புடைய அடிப்படைப் பாடம்

J. W. மெக்கார்வீ அவர்கள், "பேதுருவின் முதன்மைத் தன்மை பற்றிப் போதிக்க இயேசு விரும்பியிருந்தால், அவர் இதைக்காட்டிலும் சிறந்த சந்தர்ப்பம் எதையும் கண்டறிந்திருக்க முடியாது" என்று எழுதினார்.[24] அதற்குப் பதிலாகக் கிறிஸ்து மிகவும் அவசியமான பாடம் ஒன்றைப் போதிப்பதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்: "எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் கடையானவனும், எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக்கடவன்"; "உங்களெல்லாருக்குள்ளும் எவன் சிறியவனாயிருக்கிறானோ அவனே பெரியவனாயிருப்பான்" (மாற்கு. 9:35; லூக். 9:48ஆ).

இந்தச் செய்தியைக் கொண்டு சேர்ப்பதற்கு, எஜமானாகிய போதகர் (இயேசு) உயிருள்ள ஒரு காட்சி உதவியைப் பயன்படுத்தினார்: "இயேசு ஒரு பிள்ளையைத்[25] தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி" (மத். 18:2). "ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதை அவர்கள் நடுவிலே நிறுத்தி, அதை அணைத்துக் கொண்டு" (மாற். 9:36), அவர் தமது சீஷர் களிடத்தில், "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்" என்று கூறினார் (மத். 18:3, 4).

கிறிஸ்துவின் இந்த வார்த்தைகளில் இருந்து பல சத்தியங்கள் கொண்டு வரப்பட முடியும். எடுத்துக்காட்டாக, இவைகள் பரம்பரை வழியில் முற்றிலும் சீர்கெட்டிருத்தல் என்ற உபதேசத்தின் தவறை வெளிப் படுத்துகிறது: ஆதாமின் பாவத்தினால் ஒரு குழந்தை "முற்றிலும் சீர்கேடுள்ள" நிலையில் பிறக்கிறது என்ற நம்பிக்கை தவறானதாக உள்ளது. இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு நாம் பிள்ளைகளைப் போலாக வேண்டும் என்று இயேசு கூறினார். மீண்டுமாக கர்த்தருடைய வார்த்தை கள், பச்சிளம் குழந்தைகளின் ஞானஸ்நானம் என்று அழைக்கப்படும் விஷயத்தின் தவறைக் காண்பிக்கிறது: ஒரு குழந்தையானது தனது

"இருக்கின்ற நிலையிலேயே" இராஜ்யத்திற்குத் தயாரானதாக உள்ளது மற்றும் அந்தக் குழந்தையை அவ்வாறாக்குவதற்கு மனிதரால் ஏற்படுத்தப் பட்ட எந்த ஒரு சடங்கும் தேவைப்படுவதில்லை.

ஆயினும் கிறிஸ்து, தமது விவரிப்பில் ஒரு சத்தியத்தின்மீது கவனம் செலுத்தினார்: தாழ்மையின் அவசியம்,[26] ஊழியம் கொள்வதற்குப் பதிலாக ஊழியம் செய்வதில் மனவிருப்பம். அந்த நாட்களில், சிறு பிள்ளைகள் சமுதாய அளவீட்டில் அடிநிலையில் இருந்தார்கள். இன்றைய நாட்களில் அவர்கள் பெரும்பாலும் தொண்டு செய்விக்கப்படுவதில் முதல்நிலையில் இருக்கின்றார்கள், ஆனால் அந்த நாட்களில், அவர்கள் பொதுவாகக் கடைநிலையில் இருந்தார்கள். கர்த்தருடைய இராஜ்யத்தில் மதிப்பு எதையாவது கொண்டிருக்க வேண்டுமென்றால், அவர்கள் [சீஷர்கள்] ஒரு தாழ்மையான நிலையை மேற்கொள்ள வேண்டும் என்பதைச் சீஷர்கள் கண்டுணர வேண்டும் என்று கர்த்தர் முயற்சி செய்து கொண்டிருந்தார்.[27]

புதிய ஏற்பாடு முழுவதிலும், தாழ்மையின் அவசியம் போதிக்கப் பட்டுள்ளது.[28] பவுல், "ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமை யினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" என்று கூறினார் (பிலி. 2:3). பேதுரு பின்வருமாறு எழுதினார்:

> ... நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத் தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.
>
> ஆகையால் ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (1 பேது. 5:5, 6).

முதலாவதாக இருப்பதற்கு, நீங்கள் கடைசியானவராக இருக்க வேண்டும்! மகாபெரியவராய் இருப்பதற்கு நீங்கள் கீழானவராக இருக்க வேண்டும்! இந்தக் கொள்கைகள், முதலாம் நூற்றாண்டில் இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குப் புரிந்துகொள்ளக் கடினமானவை களாக அவைகளை ஏற்றுக்கொள்வதற்கு அதை விடக் குறைவானவை களாகவே இருந்தன. இவைகள் இன்றைய நாட்களில், சுய செல்வாக்கைப் பெருக்குதல் மற்றும் சுயத்தை மேம்படுத்துதல் என்பவற்றைக் கொண்டுள்ள, மேட்டிமை நிறைந்த இவ்வுலகில் இருமடங்கு கடினமான வைகளாக உள்ளன. நீங்கள் என்னைப் போலிருந்தால், கிறிஸ்துவின் வார்த்தைகள் உங்கள் இருதயத்தில் ஒரு ஜெபத்தைத் தூண்டுகிறதாக இருக்கும்: "தேவனே, அதிகம் தாழ்மையாயிருக்க எனக்கு உதவி செய்யும். அதிகமாய் சிறுபிள்ளை போலிருக்க எனக்கு உதவி செய்யும்."

### சிறு பிள்ளைகளுடன் தொடர்புடைய துணைநிலைப் பாடம்

இயேசுவின் காட்சிச் செயல்விளக்கமானது, பிள்ளைகளுடன் நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடர்புடைய பல்வேறு போதனை களுடன் ஒரு உரையை அறிமுகப்படுத்திற்று (மத். 18:5-14; விசேஷமாக,

வசனங்கள் 5, 6, 10 மற்றும் 14 ஆகியவற்றைக் கவனிக்கவும்). செய்தியானது படிப்படியாக வளருகையில், "சிறியவர்கள்" என்ற சொற்றொடர் பிள்ளை களை மட்டுமின்றி பிள்ளைகளுடையது போன்ற விசுவாசம்[29] கொண்ட சீஷர்களையும் (ஒருவேளை புதிதாய் மனம்மாறியிருப்பவர்கள் மீதான விசேஷித்த வலியுறுத்தத்துடன்) உள்ளடக்க விரிவாக்கப்பட்டது. பெரும்பான்மையான பாடங்கள் சிறுபிள்ளைகளுக்கும் பிள்ளைகளைப் போன்ற சீஷர்களுக்கும் சம அளவில் நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளன.

*சிறு பிள்ளைகளை ஏற்றுக்கொள்ளுதல் (மத். 18:5; மாற். 9:37; லூக். 9:48-50).* கிறிஸ்து, "சிறு பிள்ளைகள்" ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று கூறியதன் மூலம் தமது பிரசங்கத்தின் இந்தப் பகுதியைத் தொடங்கினார்: "இப்படிப்பட்ட சிறுபிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை அல்ல, என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான்" (மாற். 9:37).[30] சிறுபிள்ளைகள் விசேஷித்தவர்களாக உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்குள்ளாகவும் - நன்மைக்காவது அல்லது தீமைக்காவது - இருக்கிற சாத்தியக்கூறு மகாபெரியதாக உள்ளது. அவர்களை நாம் சகித்துக் கொள்ள வேண்டிய தொந்தரவு என்று ஒருக்காலும் நினைத்து விடக்கூடாது. நாம் அவர்களை நேசிக்க வேண்டும், போஷிக்க வேண்டும், மற்றும் அவர்களைப் பாதுக்காக்க முயற்சி செய்ய வேண்டும். நாம் அவர்களை, நபர்த்துவப்படுத்தப்பட்ட வாய்ப்பு என்ற வகையில் காண வேண்டும். அவர்களுக்கு போதிக்க, மற்றும் அவர்களை சரியான வகையில் பயிற்றுவிக்க நம்மால் முடிந்த எல்லாவற்றையும் நாம் செய்ய வேண்டும் (நீதி. 22:6).

மக்களை "ஏற்றுக்கொள்ளுதல்" பற்றிய இயேசுவின் வார்த்தைகளும் "என் நாமத்தினாலே" என்ற சொற்றொடரின் பயன்பாடும் யோவானுக்கு, கிறிஸ்துவின் நாமத்தினாலே சிலவற்றைச் செய்துகொண்டிருந்த ஒருவரைத் தாம் சமீபத்தில் ஏற்றுக்கொள்ளாதிருந்த நிகழ்ச்சியை நினைவூட்டியது. மாணவர்கள் சிலவேளைகளில் செய்கிறதுபோல், அவர் தமது போதகரை இடைமறித்தார்: "ஐயரே, ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பிசாசு களைத் துரத்துகிறதை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனே கூட உம்மைப் பின்பற்றாதவனானபடியால், அவனைத் தடுத்தோம்" என்றான் (லூக். 9:49).

யோவான் குறிப்பிட்ட அந்த "ஒருவன்" என்பவர் யார்? வேதபாடப் பகுதி அதைக் கூறுவதில்லை. அந்த "ஒருவன்" என்பவர் அசுத்த ஆவிகளைத் துரத்தினார் என்பது தெளிவாயிருந்தபடியால், அவர் - பிற்பாடு பேயோட்டு வதில் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்த முயற்சி செய்த சிலரைப் போல் (அப். 19:13-16) - போலியானவர் அல்ல என்பது உறுதி. இயேசு பன்னிருவரைத் தவிரப் பிற சீஷர்களையும் கொண்டிருந்தார் (லூக். 6:13) என்பதையும், கர்த்தர் தமது பூமிக்குரிய ஊழியத்தின்போது அற்புதங்கள் செய்யும் வல்லமையை அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே கொடுத்திருந்த தில்லை [மற்ற சிலருக்கும் கொடுத்திருந்தார்] என்பதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள் (லூக். 10:1, 17ஐக் காணவும்).

யோவானின் கூற்றில் உள்ள திறவுகோல் வார்த்தைகள் பின்வருபவைகளாக இருக்கலாம்: "... அவன் எங்களோடே கூட உம்மைப் பின்பற்றாதவன்." வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், அந்த நபர் கர்த்தருடன் அவ்வேளையில் பயணம் செய்து கொண்டிருந்த பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராக இருந்ததில்லை. அப்போஸ்தலர்களின் பொறாமையான பேராவல்தான் இந்தக் கலந்துரையாடலின் களஅமைவாக இருந்தது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அப்போஸ்தலராக இராதபோதிலும், சற்றுக் காலத்திற்கு முன்பு பன்னிருவர் செய்ய முடிந்திராததைச் செய்யக் கொண்டிருந்த விசுவாசத்தைக் கொண்டுள்ள அந்த இன்னொரு சீஷர்மீது அவர்கள் விரோதப் போக்கைக் கொண்டிருந்திருக்கலாம் (மத். 17:16, 19, 20).

யோவானிடத்தில் இயேசு, "அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ் செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்துத் தீங்கு சொல்லமாட்டான். நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்தில் இருக்கிறான்" என்று பதில் அளித்தார் (மாற். 9:39, 40). கர்த்தருடைய பிரதான சிந்தனை தெளிவாய்க் காணப்படுகிறது. உண்மையில் அவர், "நம்மால் பெறக் கூடிய எல்லா நண்பர்களும் நமக்குத் தேவை. இன்றைய நாட்களில் மிகவும் அதிகமானவர்கள் என்னைக் குறித்துத் தீங்கானவைகளைப் பேசுகின்றார்கள், குறைந்தபட்சம் ஒருவராவது அவ்வாறு பேசமாட்டார் என்பதை அறிவது மனதிற்குப் புத்துணர்ச்சி அளிக்கிறது" என்றே கூறினார்.[31]

துரதிர்ஷ்டவசமாகச் சிலர் வசனம் 40ஐ - "நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்தில் இருக்கிறான்" என்பதை - கிறிஸ்து, தம் "பக்கம்" இருப்பதாக உரிமைகோரி நல்ல செயல்களைச் செய்யும் எவரையும் ஏற்றுக் கொள்கின்றார், எனவே இப்படிப்பட்டவர்களை - அவர்கள் இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தாலும் இல்லாவிட்டாலும் - நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று போதிப்பதற்குப் பயன்படுத்துகின்றார்கள். அந்த விளக்கமானது இந்த வசனத்தை மத்தேயு 7:21-23உடன் முரண்படச் செய்கிறது:

> பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி "கர்த்தாவே! கர்த்தாவே!" என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: "கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?" என்பார்கள். அப்பொழுது, "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள்" என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.

மாற்கு 9:40 வசனம் கர்த்தரால் முன்பு அறிவிக்கப்பட்ட ஒரு சத்தியத்தின் இன்னொரு பக்கமாக[32] உள்ளது: "என்னோடே இராதவன் எனக்கு

*விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" (மத். 12:30). இவ்விரு வசனப் பகுதிகளும் அருகருகே வைக்கப்படும்போது, இவைகள் இயேசுவைப் பற்றி நடுநிலைமையாக இருப்பதின் முடியாமையை அறிவிக்கின்றன.*

*மாற்கு 9:41ல் இயேசு வரவேற்றல்/ஏற்றுக்கொள்ளுதல் பற்றிய ஆய்வுக்கருத்துக்குத் திரும்பினார், இப்பொழுது அவர் அந்த விஷயத்தைத் தமது அப்போஸ்தலர்களுக்கு நடைமுறைப்படுத்தினார் என்பது இதில் ஒரு விதிவிலக்காகும்: ''நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினாலே, என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மாற். 9:41). கர்த்தர் அந்தக் கூற்றைக் கூறியபோது, இரட்சிப்புக்கான எல்லா நிபந்தனைகளையும் ஒரு வசனத்திலோ அல்லது ஒரு செயலிலோ பொதிந்து வைக்கவில்லை. அப்படி அவர் செய்திருந்தால், நாம் விசுவாசித்தல் மற்றும் ஞானஸ்நானம் பெறுதல் ஆகியவற்றிற்கான அழைப்பைத் தேவையற்றதாக்கி விட முடியும் (மாற். 16:15, 16; கலா. 3:26, 27); நாம் மக்களுக்கு தண்ணீர்க் கலசங்களை மாத்திரம் கொடுத்து அந்தத் தண்ணீரை அவர்கள் கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கும்படி மட்டும் கேட்டுக் கொள்ள முடியும். தேவன் தமது பெயரைக் கொண்டுள்ளவர்களை மக்கள் உற்சாகப் படுத்தும்போது பிரியப் படுகின்றார் என்று மட்டுமே இயேசு கூறினார்.*

*<u>சிறியவர்களை மறுவலிவூட்டுதல்</u> (மத். 18:6-10; மாற். 9:42-50). கிறிஸ்து பின்பு ''சிறியவர்கள்'' பற்றிய ஆய்வுக் கருத்துக்குத் திரும்பினார்: "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக் கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" (மத். 18:6; மாற். 9:42ஐக் காணவும்). "ஏந்திரக் கல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ஒரு கழுதையினால் இயக்கக் கூடிய அளவுக்குப் பெரியதான ஏந்திரக் கல் ஒன்றைக் குறித்தது. அப்படிப்பட்ட பாரத்தினால் கடலின் ஆழத்தில் இழுக்கப்படுதல்[33] என்பது ஒரு துன்பமிக்க நிகழ்ச்சியாக இருக்கும், ஆனால் இது, "சிறியவர்களுக்கு" இடறல் உண்டாகக் காரணமானவர்களுக்குக் காத்திருக்கும் துன்பத்தைப் போல் அவ்வளவு பெரியதாக இராது.*

*"சிறியவர்கள்" என்ற சொற்றொடரை நாம் பிள்ளைகளுக்கோ, புதிதாய் மனம்மாறியவர்களுக்கோ அல்லது பொதுவாகக் கிறிஸ்தவர்களுக்கோ, யாருக்குப் பயன்படுத்தினாலும் இந்தப் போதனை ஒரே மாதிரியான தாகவே உள்ளது. மற்றவர்கள் தவறு செய்வதற்கு அவர்கள்மீது செல்வாக்குச் செலுத்தும் ஏதொன்றையும் செய்வதற்கு நாம் ஒருக்காலும் முயற்சி செய்யக்கூடாது (ரோமர் 14:13, 21ஐ காணவும்). இடறல்கள் யார் மூலம் வருகிறதோ, அந்த மனிதனுக்கு ஒரு "ஐயோ" கூறப்பட்டுள்ளது (மத். 18:7).*

*இயேசுவின் வார்த்தைகள் சுயபரிசோதனைக்கு அழைக்கின்றன: நமக்கோ அல்லது பிறருக்கோ தீங்கு விளைவிக்கக் கூடிய ஏதாவதொன்றை நாம் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கின்றோமா? அப்படியிருந்தால், அது*

நமது வாழ்விலிருந்து பிளந்து எடுக்கப்பட வேண்டும்:

> உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப் பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கும். உன் கால் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு காலுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கும். உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கிப்போடு; நீ இரண்டு கண்ணுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப் படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கும்[34] (மாற். 9:43-48).

இயேசு இதற்கு முன்னதாக மலைப் பிரசங்கத்தில் இதே போன்ற சொல்லாக்கத்தைப் பயன்படுத்தி இருந்தார் (மத். 5:27-30ஐக் காணவும்). உடலை ஊனப்படுத்துவதைக் கர்த்தர் ஊக்கப்படுத்துவதில்லை ஆனால், ஆத்துமாவைச் சிட்சிப்பதையே அவர் ஊக்கப்படுத்தினார். நமது வாழ்வில் தீமையை உற்சாகப்படுத்துகிற எதுவும் - அது எவ்வளவு விலையுயர்ந்ததாக இருப்பினும் - கருணையற்ற வகையில் எடுத்துப்போடப்பட வேண்டும்.

நரகத்தைப் பற்றிப் பேசியதில் இயேசு, ‘‘அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கும்’’ என்பதுடன் பின்வரும் எதிர்பாராத வார்த்தைகளைக் கூட்டினார்: “எந்த மனுஷனும் அக்கினி யினால் உப்பிடப்படுவான்’’ (மாற். 9:49).[35] அவர் இதற்கு முன்பு, பாதுகாக்கும் முகமைப் பொருள் என்ற வகையில் குறிப்பிடுவதற்கு உப்பின் உருவகத்தைப் பயன்படுத்தியிருந்தார் (மத். 5:13). இவ்விடத்திலும், பாதுகாப்பின் கருத்து, கண்ணோக்கில் இருக்கலாம்: தேவபக்தியற்றவர்கள் நரக அக்கினிக்கு ‘‘இரையாக வைக்கப்’’ பட்டிருப்பார்கள்; அதாவது, அவர்கள் ஒருக்காலும் இறக்கமாட்டார்கள். பரலோகத்தில் பாதுகாக்கப் பட்டிருத்தலின் உறுதிப்பாடு ஒரு மகிமையுள்ள சிந்தனையாக உள்ளது; நரகத்தில் பாதுகாக்கப்பட்டிருத்தல் என்ற கருத்து, ஒப்பிட முடியாத அளவுக்குப் பயங்கரமானதாக உள்ளது.

அடுத்த வசனத்தில் கிறிஸ்து, உப்பின் உருவக விளக்கத்திற்கு இன்னொரு பிறழ்வைக் கொடுத்தார்: “உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப் போனால், அதற்கு எதினாலே சாரமுண்டாக்குவீர்கள்? உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள், ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர் களாயும் இருங்கள்’’ (மாற். 9:50). கர்த்தர் மலைப் பிரசங்கத்தில் ஏற்படுத்திய ஒரு கருத்தை (மத். 5:13) பின்வரும் நடைமுறைப் பயன்பாட்டுடன் மீண்டும் கூடுதலாகக் கூறினார்: அவர்கள் தங்களுக்குள் தொடர்ந்து வாக்குவாதம் செய்துகொண்டிருந்தால் (லூக். 9:46), அவர்கள் தங்களின் உப்புத் தன்மையை இழந்துபோவார்கள்; அவர்கள் “பூமிக்கு உப்பாக’’

இருக்க முடியாது. அவர்கள் "ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களா யிருப்பதற்கு" கற்றுக்கொள்வது நீங்களும் நானும்கூட ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாயிருப்பது அவசியமாயிருப்பது போன்றே, அவசியமாக இருக்கிறது.

*சிறியவர்களை மதித்தல் (மத். 18:10*[36]*).* மீண்டும் ஒருமுறை இயேசு "சிறியவர்கள்" பற்றிய தமது ஆய்வுப் பொருளுக்குத் திரும்பினார்: "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையா யிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 18:10). "அற்பமாய் எண்ணுதல்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, "கீழான" மற்றும் "சிந்தை" என்பதற்கான வார்த்தைகளின் கூடுகையாக உள்ளது. இது நாம், இன்னொரு தனிநபரை "கீழாக நோக்குதல்" என்பதினால் அர்த்தப்படுத்து வதைக் குறிக்கிறது. நாம், சிறுபிள்ளைகளையோ ... அல்லது புதிதாய் மனம் மாறியவர்களையோ ... அல்லது தேவனுடைய வேறு எந்தப் பிள்ளையை யுமோ ஒருக்காலும் கீழாக நோக்கக் கூடாது. ஒவ்வொருவருமே தேவனு டைய பார்வையில் விலையேறப் பெற்றவர்களாய் இருக்கின்றார்.

வசனம் 10ன் கடைசிப் பகுதியானது மனம் கவருவதாகவும் ஏங்க வைப்பதாகவும் உள்ளது: "அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்." இந்த சில வார்த்தைகள், "காவல் தூதர்கள்" பற்றிப் பெருமளவு எழுதப்பட்டுள்ள வற்றைத் தூண்டியுள்ளன. தூதர்கள் என்பவர்கள், "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்" என்று வேதாகமம் போதிக்கிறது (எபி. 1:14). மற்றும் மெக்கார்வியின் கூற்றை மேற்கோள் காண்பிப்பதென்றால், இந்த வசனமானது, "தூதர்களின் ஊழியம் பொதுவானதாக மட்டுமின்றி, விசேஷித்ததாகவும் உள்ளது, குறிப்பிட்ட தூதர்கள் குறிப்பிட்ட தனிநபர்களைக் கவனித்துக் கொள்ளு வதற்காக பணிப்பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டுள்ளார்கள்[37] என்று கருத்துத் தெரிவிக்கிறது. அந்தப் பொதுவான சத்தியங்களுக்கு அப்பால் உள்ள எதுவும் யூகமாக உள்ளது.

ஒவ்வொரு நாளும் சிறுவர்கள் இறக்கின்றார்கள், சிலவேளைகளில் பயங்கரமான வழிமுறைகளில் இறக்கின்றார்கள் என்ற உண்மையானது, "காவல் தூதர்கள்" என்பவர்கள், தேவனுடைய இயற்கையான விதிகளைப் புறம்பே ஒதுக்கி விட அதிகாரம் பெற்றிருப்பதில்லை என்று நம்மை நம்பச் செய்வதற்குப் போதுமானதாக இருக்க வேண்டும். உண்மையில், தேவனு டைய வசனத்தின் பொதுவான போக்கானது அவர்களின் அடிப்படை அக்கறை உடல் நலத்தின்மீதல்ல ஆனால் ஆவிக்குரிய நலத்தின்மீது உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கும். நாம் மத்தேயு 18:10ஐ, தேவன் தம்முடைய வர்கள்மீது கவனம் செலுத்துகின்றார் என்பதற்கு இன்னொரு எளிய ஆதாரமாக எடுத்துக்கொண்டு அத்துடன் நிறுத்திக் கொண்டால், சரியாகச் சிந்திக்கின்றவர்களாய் இருப்போம் (1 பேது. 5:7; எசே. 34:12ஐக் காணவும்).

*சிறியவர்களை மறுபடியும் கட்டியெழுப்புதல் (மத். 19:12-14).* கர்த்தர், "சிறியவர்கள்" மீதான தமது போதனையை நம்மில் பலருக்குப் பழக்கமான ஒரு விவரிப்புடன் முடித்தார்:

> உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு நூறு ஆடுகளிலிருக்க, அவைகளில் ஒன்று சிதறிப்போனால், அவன் மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப் போய்ச் சிதறிப்போனதைத் தேடாமலிருப்பானோ? அவன் அதைக் கண்டுபிடித்தால், சிதறிப்போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைக் குறித்துச் சந்தோஷப்படுகிறதைப் பார்க்கிலும், அதைக் குறித்து அதிகமாய்ச் சந்தோஷப்படுவான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல (மத். 18:12-14).

பிற்பாடு இயேசு, வேதாகமத்தில் மிகவும் நினைவுகூரத்தக்க அதிகாரங்களில் ஒன்றை உண்டாக்குவதற்காக, காணாமற் போன ஆட்டின் உருவகத்துடன் காணாமற்போன காசு மற்றும் காணாமற்போன ஒரு பையன் ஆகியவற்றின் உருவகங்களை இணைத்தார்: லூக்கா 15. அங்குபோலவே, இங்கும் அவரது கருத்து ஒரே மாதிரியானதாகவே உள்ளது: தேவன், "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி" இருக்கின்றார் (2 பேது. 3:9).

மீண்டும், "சிறியவர்கள்"மீது பல்வேறு பயன்பாடுகளை ஏற்படுத்த முடியும்: சிறு பிள்ளைகள் வளர்ந்து பாவத்தின் மலைகளில் வழி விலகித் தூரமாய்ச் செல்லுகின்றார்கள் (ரோமர் 3:23); அவர்களை நாம் ஆண்டவரிடத்திற்கு மென்மையாகத் திருப்பிக் கொண்டு வரவேண்டும். புதிதாக மனம்மாறிய ஒருவர் - அல்லது ஏற்கனவே மனம்மாறியுள்ள ஒருவர் - விசுவாசத்திலிருந்து "விலகிச்" செல்லக்கூடும் (எபி. 2:1); நாம் "சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ண" வேண்டியது அவசியமாயுள்ளது (கலா. 6:1; மேலும் யாக். 5:19, 20ஐக் காணவும்).

## முடிவுரை

இயேசுவின் உரை முடிக்கப்படாது இருந்தது. நாம் காணப்போகிறபடி, சகோதரர்களுக்கு இடையில் உள்ள உறவுமுறை பற்றி அவர் மிகவும் குறிப்பாக இருந்தார் (மத். 18:15-35). அந்த வலிவார்ந்த பாடக் கருத்துப் பற்றிய நமது கலந்துரையாடலானது, அடுத்த பாடம் வரையில் காத்திருக்க வேண்டியிருக்கும்.

[இந்தப் பாடத்தை] முடிக்கையில்,[38] நான் மத்தேயு 18:3, 4ல் கர்த்தரின் கூற்றுக்குத் திரும்ப விரும்புகின்றேன்: "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே

பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்" என்று கூறினார் (மத். 18:3, 4). ஒருவர் தம்மை, ஒரு சிறுபிள்ளையைப் போலத் தாழ்த்தாமல் இருந்தால், இராஜ்யத்தில் பெரியவராயிருக்க முடியாது என்பதை நமது படிப்பு காண்பித்துள்ளது; இப்போது நான், அந்த வகையான தாழ்மையின்றி ஒருவர் இராஜ்யத்தினுள் பிரவேசிக்கவும் முடியாது என்று கிறிஸ்து கூறியதைச் சுட்டிக் காண்பிக்க விரும்புகின்றேன்.

சிலர், தாங்கள் பாவத்தில் இழந்துபோகப்பட்டிருப்பதை ஒப்புக் கொள்வதற்கு [இயலாத அளவு] மிகவும் மேட்டிமை உடையவர்களாய் இருக்கின்றார்கள்; சிலர் இயேசு தங்களுக்குத் தேவை என்பதை ஒப்புக்கொள்வதற்கு [இயலாத அளவு] மேட்டிமை உடையவர்களாய் இருக்கின்றார்கள்; சிலர் ஞானஸ்நானம் பெறுவதன்மூலம் அவரது சித்தத்திற்குத் தங்களைக் கீழ்ப்படுத்துவதற்கு [இயலாத அளவு] மிகவும் மேட்டிமை உடையவர்களாய் இருக்கின்றார்கள். அவ்வகையான மேட்டிமையானது ஆத்துமாவைப் பேரழிவுக்கு உட்படுத்தும்! துன்பம் தரும் அவ்வகையான மேட்டிமை உங்கள் வாழ்வை ஆளக்கூடாது என்று நான் ஜெபிக்கிறேன்.[39] நீங்கள் கர்த்தரின் சித்தத்தைச் செய்ய வேண்டியது அவசியமானதாக இருந்தால், உங்கள் மேட்டிமையை தூக்கியெறிந்து விட்டு இன்றே அதைச் செய்யுங்கள்!

---

குறிப்புகள்

[1]The Living Bible பொழிப்புரை. [2]இயேசுவின் விமர்சகர்களுடைய நடவடிக்கைகளும் எண்ணப்போக்குகளும் மறைமுகமாய் கூறப்பட்டுள்ளன. இவ்வரலாறு பற்றிய அதிகமான செய்திகளுக்கு இப்புத்தகத்தில் இதைத் தொடர்ந்து வரும் பிரசங்கத்தைக் காணவும். [3]2 தீமோத்தேயு 2:13ஐக் காணவும். [4]இவ்வரலாறு பற்றிய அதிகமான செய்திகளுக்கு இப்புத்தகத்தில் இதைத் தொடர்ந்து வரும் பிரசங்கத்தைக் காணவும். [5]மாற்கு சுவிசேஷ விவரம், "இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலு ... மேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது" என்ற விவரத்தைக் கூடுதலாகக் கூறுகிறது (மாற். 9:29). ஜெபம் மற்றும் விசுவாசம் ஆகியவற்றிற்கிடையில் உள்ள உறவைக் கலந்துரையாடுகின்ற பின்தொடரும் பிரசங்கத்தைக் காணவும். [6]"எனது அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என்ற பிரசங்கத்தில் இந்தக் குணமாக்கும் நிகழ்ச்சி பற்றிய கலந்துரையாடலைக் காணவும். [7]கலிலேயாவுக்கு அவர்கள் எப்போது திரும்பி வந்தார்கள் என்ற மிகச் சரியான விவரம் தெளிவற்றதாக உள்ளது. மறுரூபமாகுதலும் அசுத்த ஆவிபிடித்த பையனைக் குணமாக்குதலும் பிலிப்புச் செசரியாவின் அருகே நடைபெற்றன மற்றும் அந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்பு இயேசு கலிலேயாவுக்குத் திரும்பினார் என்று பெரும் பான்மையான விளக்கவுரையாளர்கள் நம்புகின்றார்கள். சிலர், இயேசுவும் பன்னிருவரும் மறுரூபமாகுதலும் இந்தக் குணமாக்கும் நிகழ்ச்சியும் நடை பெறுவதற்கு முன்பாகவே ஏற்கனவே கலிலேயாவுக்குப் பயணம் செய்திருந்ததாக நினைக்கின்றார்கள். ஒரு சில விளக்கவுரையாளர்கள், மறுரூபமாகுதலுக்கும் இந்தக் குணமாக்கும் நிகழ்ச்சிக்கும் நடுவில் கலிலேயாப் பயணம் நடைபெற்றதாக நினைக்கின்றார்கள். [8]மாற்கு சுவிசேஷ விவரத்தில் "மூன்று நாளைக்குப் பின்பு" என்றிருக்கையில் மத்தேயு சுவிசேஷ விவரம் "மூன்றாம் நாளிலே" என்று கூறுகிறது.

நம்மில் பலருக்கு, இந்த இரு சொற்றொடர்களும் மாறுபட்ட அர்த்தங்களைக் கொண்டுள்ளது - ஆனால் யூதர்களுக்கு இவ்வாறு இருப்பதில்லை. இயேசு கல்லறையில் மூன்று நாட்கள் இருந்தாரா இல்லையா என்பதைப் படிக்கும்போது இதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். [9]இயேசுவின் மரணம் பற்றிய இந்த அறிவிப்பிற்குச் சற்றுப்பின்பு அப்போஸ்தலர்கள், இராஜ்யத்தில் யார் பெரியவனாயிருப்பான் என்று தர்க்கம் செய்யத் தொடங்கியிருந்தார்கள் (லூக். 9:45, 46ஐக் காணவும்). இன்னமும் அவர்கள் தங்கள் சிந்தையில், உலக ரீதியான, பூமிக்குரிய, அரசியல் ரீதியான ஒரு இராஜ்யத்தையே கொண்டிருந்தார்கள். அப்போஸ்தலர்களைப் போலவே அதேவிதமான கருத்தைக் கொண்டிருந்த மற்ற யூதர்களை இயேசுவின் மரணம் பற்றிய அவரது போதனை எவ்வாறு குழப்பிற்று என்பதற்கான ஒரு உதாரணத்திற்கு யோவான் 12:33, 34ஐக் காணவும். [10]James Burton Coffman, *Commentary on Luke* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1975), 187.

[11]முன்னாள் வரிவசூலிப்பவரான மத்தேயு மாத்திரமே, தேவாலய வரி செலுத்துதல் பற்றிய இந்த விவரத்தைப் பதிவு செய்துள்ளார். [12]"இரண்டு திராக்மா" என்பது கிரேக்க மொழியில் ஒரே வார்த்தையில் இருந்து வந்துள்ளது. [13]லூக்கா 15:8, 9 வசனங்கள் மாத்திரமே புதிய ஏற்பாட்டில் ஒரு திராக்மா நாணயம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே இடமாக உள்ளது. மத்தேயு 17ல் உள்ள வார்த்தையானது இரண்டு திராக்மாக்களைக் குறிப்பிடுகிறது. [14]உலகில் நான் வாழும் பகுதியில் நாங்கள் ''குறைந்தபட்சக் கூலி'' என்று கூறுவதுண்டு. [15]NKJV மற்றும் NIV ஆகியவற்றைக் காணவும். [16]பேதுரு அலுவலர்களிடத்தில் பேசிய பின்பு, "வீட்டிற்குள் வந்த"தால் (மத். 17:25), அந்த உரையாடலின்போது அவர் அநேகமாக வீட்டிற்கு வெளியே இருந்திருக்க வேண்டும். [17]பேதுருவும் [வரிசெலுத்துவதில்] விதிவிலக்குப் பெற்றிருந்ததாக இயேசு கூறியிருக்க அவசியமில்லை, ஆனால் அந்த அப்போஸ்தலர் விதிவிலக்குப் பெற்றிருப்பினும் இல்லாவிடினும், கிறிஸ்துவின் முடிவு ஒரே மாதிரியானதாக இருந்தது: வரிசெலுத்தப்பட வேண்டும். [18]வர்த்தகரீதியான மீனவர் என்ற வகையில் பேதுரு சாதாரணமாக ஒரு வலையைப் பயன்படுத்தினார் (மத். 4:18), ஆனால் ஒரு வலையானது நூற்றுக் கணக்கில் மீன்களைப் பிடித்தது. இந்த நிகழ்ச்சியிலோ பேதுருவுக்கு ஒரே ஒரு மீன் மட்டுமே தேவைப்பட்டது. [19]Richard Rogers, *Behold Your King (Book of Matthew)* (Lubbock, Tex.: Sunset Study Series, n.d.), 22. [20]NIVயைக் காணவும். புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மட்டுமே இந்த நான்கு திராக்மாக்கள் நாணயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

[21]குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ் ஒருவர் தமது சொந்த உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டியதன் அவசியம் பற்றிப் பவுல், நீளமான இரண்டு கலந்துரையாடல்களை எழுதினார் (ரோமர் 14; 1 கொரி. 8-10). [22]மத்தேயு 20:21; மாற்கு 10:37 ஆகியவற்றை முன் எதிர்பார்க்கவும். [23]கப்பர்நகூம் (மாற். 9:33). அவர்கள் கலிலேயாவைச் சுற்றி அதிகமாய்ப் பயணம் செய்திருந்தார்கள் என்பது தெளிவு, அதன் பின்பு அவர்கள் கப்பர்நகூமுக்குத் திரும்பியிருந்தார்கள். [24]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 430-31. [25]இது பேதுருவின் பிள்ளைகளில் ஒன்றாக இருந்திருக்கக் கூடுமா? [26]உண்மையான தாழ்மை என்பது முந்திய பகுதியில் கலந்துரையாடப்பட்ட குணநலனில் காணப்படுகிறது: சுயத்தை மறக்கும் தன்மை. பொதுவாகப் பேசுவதென்றால், "மாபெரும்'' அல்லது "குறிப்பிடத் தகுதியற்ற'' என்பது போன்ற அர்த்தமற்ற சொற்றொடர்களினால் சிறுபிள்ளைகள் தங்களை வகைப்படுத்திக் கொள்வதில்லை. [27]தொடர்ந்து வந்த நாட்களில், சுயத்தை நாடும் பேராவல்களுக்கு எதிராகச் சீஷர்களை இயேசு அடிக்கடி எச்சரித்தார் (மத். 23:8-12;

*லூக். 22:24-27 ஆகிய வசனங்களைக் காணவும்).* [28]*லூக். 14:11; 18:14; அப். 20:19; எபே. 4:2; கொலோ. 3:12; யாக். 4:6; 1 பேது. 3:8 ஆகியவற்றைக் காணவும்.* [29]*மத்தேயு 18:6ம் வசனம் விசுவாசிக்கின்ற சிறியவர்களைப் பற்றிப் பேசுகிறது. மாற்கு 9:37 வசனமானது சிறியவரில் ஒருவரை ஒரு கலசம் தண்ணீர் கொடுத்து வரவேற்கும் ஒரு சீஷனுக்குச் சமமாக்குவதாகக் காணப்படுகிறது. மத்தேயு 18:12, 13ல் பாதை விலகிச் செல்லும் ஆடுகளைப் பற்றிய குறிப்பானது "சிறியவர்கள்" (வ. 14) என்பதற்கு விசேஷித்த குறிப்பைக் கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது.* [30]*இயேசு தமது சீஷர்களை ஏற்றுக்கொள்ளுகின்ற மக்களைக் குறிப்பிடுவதற்கு இதே வார்த்தைகளை முன்பு பயன்படுத்தியிருந்தார் (மத். 10:40; யோவா. 13:20ஐயும் காணவும்).*

[31]*"விரோதி என்று அறிவிக்கப்படாத ஒருவர் நண்பராகக் கருதப்படலாம்"* (Robert L. Thomas, ed., and Stanley N. Gundry, assoc. ed., *A Harmony of the Gospels* [Chicago: Moody Press, 1978], 125). [32]*உலகில் நான் வாழும் பகுதியில், நாங்கள் "சுண்டியெறியும் பக்கம்" என்று கூறுவோம்.* [33]*பழங்காலத்து நாட்களில், சில நாகரிக சமுதாயங்கள் மனிதர்களை ஏந்திரக் கல்லுடன் சேர்த்துக் கட்டி அவர்களைக் கடலுக்குள் தூக்கியெறிந்து ஆயுள் தண்டனையை நிறைவேற்றின. மிக சமீபத்திய ஆண்டுகளில் அமெரிக்காவின் கொள்ளைக்காரர்கள் தனிநபர்களுடன் கனத்த எடைகளைக் கட்டி அவர்களை ஆறுகள், ஏரிகள் அல்லது சமுத்திரங்களில் தாழவிட்டதாக அறிக்கை தரப் பட்டுள்ளது.* [34]*நரகத்தை (gehenna) விவரிக்க இயேசு உருவக மொழிநடையைப் பயன் படுத்துகின்றார் என்பது தெளிவாக உள்ளது: உண்மையான புழுக்கள் உண்மையான அக்கினியில் வாழ்வதில்லை. புழுக்கள் (முட்டைப் புழுக்கள்) மற்றும் அக்கினி என்பவை எருசலேமின் தெற்கேயிருந்த ஹின்னோம் அல்லது பென்ஹின்னோம் பள்ளத்தாக்கில் கொட்டப்பட்ட குப்பையிலிருந்து தரவழைக்கப்பட்டன (2 நாளா. 28:3; 33:6; நெகே. 11:30; எரே. 7:31, 32; 19:2, 6; 32:35 ஆகிய வசனங்களைக் காணவும்). புழுக்கள் என்பதின் உருவகமானது அநேகமாக குற்ற உணர்வுள்ள மனச்சாட்சி நித்தியத்திற்கும் பற்கடிப்பதைக் குறிப்பிடலாம் (லூக். 16:25-28), அதே வேளையில் அக்கினி என்பதன் உருவகமானது தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து நித்தியத்திற்கும் பிரிக்கப்பட்டுப் பெரும் வேதனையில் இருப்பதைக் குறிப்பிடலாம் (2 தெச. 1:10).* [35]KJV *வேதாகமம் "எந்தப் பலியும் உப்பினால் உப்பிடப்படும்" என்பதையும் கூடுதலாகக் கூறுகிறது [தமிழிலும் இவ்வாறே உள்ளது]. இந்த வார்த்தைகள் தொடக்க காலக் கையெழுத்துப் பிரதிகள் பெரும்பாலானவற்றில் காணப்படுவதில்லை, ஆனால் அவைகள் இன்னமும் பாதுகாத்தல் என்ற கருத்தை மறுவலியூட்டுகின்றன: பழைய ஏற்பாட்டுக் காலத்தில், உடன்படிக்கையின் உப்பானது (லேவி. 2:13) பலியைத் தூய்மைப்படுத்திப் பாதுகாத்தது.* [36]KJV *வேதாகமமானது வசனம் 11ஐக் கூடுதலாகக் கூறுகிறது, இது பழைய கையெழுத்துப் பிரதிகளில் காணப்படுவதில்லை. நாம், பிற்பாடு லூக்கா 19:10ல் இவ்வார்த்தைகளைக் காண்போம்.* [37]McGarvey and Pendleton, 434. [38]*இந்த இடத்தில் பாடத்தின் பிரதானக் கருத்துக்களை மறுகண்ணோட்டமிடுவதற்கு புத்தகத்தின் அளவானது என்னை அனுமதிப்பதில்லை, ஆனால் நீங்கள் அவ்வாறு செய்ய விரும்பலாம்.*

[39]*இவ்விடத்தில், மேட்டிமை பற்றிய புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகளின் மாதிரிகள் பின்வருமாறு: ரோமர் 1:30; 2 தீமோ. 3:2; யாக். 4:6; 1 யோவா. 2:16.*